உ

சிவமயம்



யாழ் / அளவெட்டி தம்மளையைப் பிறப்பிடமாகவும்
திருகோணமலை திரியாயை நிரந்தர வசிப்பிடமாகவும்
ஆசிரியர் விடுதி' லிங்கநகரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சண்முகம் தனபாக்கியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

31ம் நாள் நினைவு மலர்

**22.05.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

## திருமதி.சண்முகம் தனபாக்கியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**22.05.2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்புத் தாயாருக்கு
## சமர்ப்பணம்

உயிர்தந்து உடல்தந்து
எம்மை எல்லாம்
உருவாக்கி உயர்ந்து நின்ற
தெய்வமே அம்மா!
வையத்தில் நாம் வாழ
வழிகாட்டி விட்டு
வானுலகு சென்ற உங்கள்
பாதக்கமலங்களுக்கு
இம்மலரைக் காணிக்கை
ஆக்குகின்றோம்

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவு மலர்

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு"

மண்ணுலகில்
28 . 02 . 1932



விண்ணுலகில்
22 . 04 . 2013

அமரர்

## திருமதி. சண்முகம் தனபாக்கியம்

அவர்களின்

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விஜயமதின் ஆனதோர் சித்திரையின்
பூண்ட திதி பூர்வபக்க துவாதசியே - திருமகளாம்
தனபாக்கியம் தண்ணளியாள் அரன்
தன்தாள் சங்கமித்தாள் அன்று
(விஜய வருடம் சித்திரைத் திங்கள் 9ம் நாள் திங்கட்கிழமை பகல் 1.35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலு எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே

## தேவாரம்

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதி குணம் நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றி என்றுஞ்
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே

## திருவிசைப்பா



நையாத மனத்தினை நைவிப்பான் இத் தொருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
பவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே



## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா ! நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கான்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிதை அகவல்

இந்துமா கடலின் முத்தெனத் திகழும்

ஈழநன்னாட்டின் வடபால் யாழ்பாடி(யின்)

பரிசென விளைந்தது யாழ்நகராகும்

இதனோர் பகுதியாம் 'அளவெட்டிதம்மளை'

சிவன் துணை கொண்ட காசியர் - கந்தையா

கந்தர் பொன்னம்மா இணைவின் புதல்வியாய்

முப்பத்திரெண்டின் மாண்புறு பங்குனி

இருபத்தெட்டாம் இனிய நன்னாளில்

தனபாக்கியமும் அண்ணன் கனகரெத்தினமும்

கண்ணம்மாவும் இராசரெத்தினமும்

கைலாயதேவியும் அன்னம்மாவும்

சிவபாக்கியம்பர்வததேவி மகிழ் உடன்பிறப்பாய்

வந்து பிறந்தாள் வாழ்த்திட வையம்

கிடந்துபுரண்டு கேள்வி பார்வையால்

வளர்ந்து தவழ்ந்து வார்த்தைகள் ஆடி

எழுந்து நடந்து இடறிவிழுந்து

ஓடிப்பாய்ந்து உறவுகள் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் வளர்ந்து அறிவும் வளர்ந்து
பள்ளிக்கூடப் பருவமடைந்தாள்
நூலொடுசென்று நாலும் பயின்று
நுண்மதிகொண்ட பெண்மகள் ஆனாள்

இல்லறம்நாடி நல்லவர்தேடி
ஈழநன்னாட்டின் எழுவான்கரையின்
குரைகடலோத நித்திலம் கொழிக்க
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழிலில்
கோணமாமலையார் குடியமர்ந்துள்ள
திருமலை மண்ணைச் சேர்ந்த பற்றான
திரியொடு நெய்யும் சேர்த்தேயீந்த
'திரியாய்' என்னும் தகு பேரூரின்
உத்தமர்கதிரவேலு சண்முகத்தை
நாற்பத்தொன்பதில் கரமது பற்றி
துணைவனாயேற்று தோய்வின்பத்தால்
ஆசான்குகதாசன், அருள்நேசனை
அன்புச்செல்வ மக்களாய்க் கண்டும்
பெண் மகவொன்றை சிவனே ஏற்க
செல்வச்செழிப்பாய் மேதியும் பசுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்நெற்கழனியும் தேடிப்பெற்று
தொழிலது சிறக்க செழுமையாய் வாழ்ந்தனர்

மைத்துனர் மயில்வாகனம் சின்னத்துரை
இராசலிங்கம், சகுந்தலாதேவி
ஆறுமுகம் திருநாவுக்கரசுடன்
கற்பகம் உறுதுணையாயினர்

எண்பத்தைந்தில் வந்தது பேரிடி
எரியும் நெருப்பின் சுவாலை தாங்காமல்
எல்லார் மனமும் பேதலிப்புற்று
இடமது பெயர்ந்து யாழ்நகர் சென்று
உற்றார் சுற்றம் உதவிகளோடு
சிற்சில காலம் வாழ்க்கை நடத்தி
எண்பத்தாறில் மீளவும் வந்து
வாழுங்காலம் மூத்தபுதல்வன்
குகதாசன் அவர்களுக்கு
பத்மாவதியைத் துணைவியாய்க்கண்டு
திருமாவளவனும் அவ்வையும்
பேரராக பேறுபெற்றனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூறு ஆறில் இடம்பெயர்ந்து
முல்லைத்தீவு – மாமூலையூரில்
தஞ்சமடைந்து வாழும் வேளை
காலம் கனிந்து மணவினை வேண்டி

அருள்நேசனுக்கு இனிய சசிகலாவை
அன்புடன் பெற்று உறவினர் கூடி
திருமணம் செய்து எழிலினியோடு
அன்புச்செல்வன் திருமாறன் பேரனை
கண்டு களித்து இருக்கும் காலம்
இரண்டாயிரம் நாலாம் மாதம்
கண்ணுக்கினிய கணவனை இழந்து
சோகமடைந்து துயருற்றனரே

திருமலை வந்து – தகுதியாய் வாழ்ந்து
உவர்மலை இருந்து – வருவோர் தமக்கு
வரவேற்பளித்து – விருந்துகள் அளித்து
அயலவரோடும் - அன்பு பாராட்டி
இறுதி இடமாம் - இலிங்கநகர் ஆசிரியர் விடுதி
இறைவன் அடிக்கு அழைத்ததுவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் தளர்வுற்று - இரண்டரை ஆண்டுகள்
படுக்கையும் இருப்பும் - இயலா நிலையும்
மகனொடு மருமகள் பேரர்கள்
அருமைச் சம்பந்தியார் அன்பு பாராட்டி
மனங்கோணாமல் பராமரித்து
சொல்லாப் போக்காய் சுற்றம் வருந்த
இவ்வாண்டு சித்திரை ஒன்பதில்
பூர்வபட்ச துவாதசி தன்னில்
மண்ணைவிடுத்து விண்ணடைந்தாரே
அங்கவர் ஆன்ம அமைதிக்காய் நாம்
இங்கிறைவன் தாள் ஏந்தி நிற்போமே!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

திருமதி.தனபாக்கியம் சண்முகம் அம்மா அவர்கள் 22.04.2013 அன்று தமது 81வது வயதில் இறைவனடி சேர்ந்து ஒரு மாதமாகி விட்டது. இயற்கையோடு சேர்ந்த பிரிவு என்றாலும் மனதுக்கு பெரும் வேதனையைத் தருகின்றது.

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு, திரியாயில் அமரர்.திரு.சண்முகம் அவர்களின் இல்லதரசியாக வாழ்ந்தவர். சமூக, இன்ப, துன்பங்களில் இரண்டறக் கலந்தவர். அனைவரையும் தமது பிள்ளைகளைப் போல் அன்போடும் பாசத்தோடும் மதித்து, பழகும் பண்பு கொண்டவர். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்து மகிழ்ந்தவர். திரியாய் கிராமம் பலரால் மதிக்கப்படுவதற்கு காரணிகளாக அமைந்த பெண்மணிகளில் அமரர்.தனபாக்கியம் அம்மா அவர்களும் முக்கியமானவர்.

இராம, இலக்குமணன் போல் இரு ஆண் பிள்ளைகளை பெற்று, சீராக வளர்த்தெடுத்து சான்றோர் ஆக்கியவர். மூத்த புதல்வர் நல்லாசிரியராக பணி செய்து நாட்டிற்கு வளம் சேர்க்க, இளைய புதல்வன் வீட்டையும் உறவையும் காத்து நிற்க இன்பமுடன் வாழ்ந்து வரும் வேளையில், திரு.குகதாஸன் அவர்கள் தனது தாயாரை கனடாவிற்கு அழைத்து, தம்முடன் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்று விரும்பியவர். அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். இருந்தும் கோணேசப் பெருமான் தன்னுடைய பூமியில் தனக்குப் பக்கத்தில் அக்கினியுடன் சங்கமமாக வேண்டும் என்று விரும்பி விட்டார். அதுவும் நியதியாக அமைந்து விட்டது.

பிரிவுத்துயரால் வாடும் அவரது புதல்வர்களுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் மன ஆறுதலைக் கொடுக்க வேண்டும் எனவும், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் எனவும் இறைவனை வேண்டுவோம்.

நன்றி
க.துரைரெட்ணசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை தமிழ் அரசுக் கட்சி தலைவர்,
திருகோணமலை மாவட்டம்,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணியம் தவறாத தாய் ..........

மனிதர்கள் பிறக்கிறார்கள் காலமாற்றத்தால் இறந்து விடுகிறார்கள் ஆனால் ஒரு சிலர் மாத்திரம் நினைவுகளில் நிலைத்து விடுகிறார்கள் அந்தவகையில் அமரர்.சண்முகம் தனபாக்கியம் முதன்மை பெறுகின்றார். வாழ்ந்த காலத்திலே திரியாய்க்கிராமமே. சாட்சி சொல்லும் சொல்லும், செயலும் ஒன்றாகி மாணிடர்களை உண்டி கொடுத்து உயிர்காத்தவர். இலிங்கநகர் ஆசிரியர் விடுதிக்கு வந்தது முதல் இரண்டு புதல்வர்களையும் சமூகத்திற்காக வளர்த்தெடுத்த விதமறிவேன். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலே தாயை அவர்கள் பராமரித்த சிறப்பை காணும் போதெல்லாம் பெருமிதம் அடைந்து கொள்வோம்.

அளவெட்டி பிறந்த இடமாக உள்ள போதும் திரியாய் அவரை தத்தெடுத்துக் கொண்டது. ஒவ்வொரு தாயினது ஏக்கமும் குழந்தைகளைப் பாதுகாப்பதாக இருந்த போதும், பாதுகாத்து கல்வியூட்டிய சிறந்த தாயாகின்றார். திடீரென அன்னார் எம்மைவிட்டுப் பிரிந்த செய்தி துயரளித்தது. குடும்ப உறுப்பினர்கள் மனதால் சிதைந்து போனார்கள்.

இத்தகைய தாய்மையை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தாரின் வம்சத்தில் பிறப்பெடுத்து காக்க வேண்டும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் எனது சார்பாகவும் ஆசிரியர் குழாம் சார்பாகவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திரு.க.யோகானந்தன்,
அதிபர்
தி/ஸ்ரீ கோணலிங்க ம.வி,
இலிங்கநகர்

2013.05.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த புதல்வனின் புலம்பல்

ஆருயிர்த்தாயே! பத்துமாதங்கள் சுமந்து, என் பகட்டான மேனியில் பழுதேதும் வராமல் பாதுகாத்துக் கொண்ட என் தெய்வமே!

இளமைப் பராயத்தில் என்னுடல் நோயுற்ற போது துடிதுடித்து, என் கல்வியில் சிறப்புற்ற போது பேருவகை அடைந்து, தரணியில் நான் சிறப்புற வாழ்வதற்கு உன் உழைப்பெல்லாம் தந்த உத்தமத் தாயே!

உன் பெருமை நான் பேச எனக்கு வார்த்தைகள் ஏது? தேடுகிறேன் வார்த்தைகளை உன் திருமுகத்தை மனதில் நிறுத்தி. அம்மா உன் கனவுகள் நிறைவுபெற்றதா? நீ பெற்ற பிள்ளைகள் உன் ஆசைக்கனவுகளை நிறைவேற்றினார்களா? நான் அறியேன் அம்மா? இவ்விடயம் தான் எனது மனதை கரைக்கிறது.

கடமை என்ற கயிற்றினால் கட்டுண்டு உனது நிழலை பிரிந்த நாள்முதல் ஆறாத துயரை மனதினுள் சுமந்து நடைப்பிணமாக வாழுகின்றேன்.

தற்காலிகப் பிரிவில் பிரிந்திருந்து, மீண்டும் சந்திக்கும் வேளைகள் எல்லாம் எவ்வளவு நேரம் உரையாடியிருப்போம் நேரம் காலம் போவது தெரியாமல் எவ்வளவு கதைகள் கதைத்தோம். எவ்வளவு சிரிப்புக்களை உதிர்த்தோம். இன்றும் நினைக்கும் போது தித்திக்கிறது. எனது மனத்துயரத்தை கடந்த காலங்களை எண்ணிக் கொண்டே ஆற்றிக் கொள்கின்றேன் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது நிழலை எனக்கருகில் கொண்டுவர எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தேன் முடியவில்லை தாயே இப்போது தவிக்கிறேன், நிரந்தரமாக உம் நிழலை இழந்த துயரத்தினால்

அம்மா என்ற ஸ்தானத்தை யாரும் நிறைவு செய்ய முடியாது ஆனால் உமது அன்பு மழையின் ஈரம் இப்போதும் என் உடலை சிலிர்க்க வைக்கிறது. மீண்டும் சந்திக்க வாய்ப்புண்டு என்றால் தாயே! உன் நிழலில் எப்போதும் பிரியாது, உமது கையால் சமைத்த உணவை வயிறு நிறைய உண்டு உம்முடனேயே இருக்க வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்

உமது இனிய நினைவால் என்றும் வாடித்தவிக்கும்

அன்பு மகன்
சண்முகம் குகதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய புதல்வனின் புலம்பல்

எனது பிள்ளைப்பிராயத்தில் உமக்கு என்ன துயரம் தந்தேனோ! நான் அறியேன்! ஆனால் அதற்குரிய பலனை உமது இறுதிக்காலத்தில் உம்மை குழந்தை போல் பராமரிக்கும் போது அனுபவித்தேன், உணர்ந்தேன் அம்மா!

ஆனாலும் நான் இன்று வரை சளைக்கவில்லை தாயே! உன்னை என்றுமே என் தோள் மீது சாய்த்து பாதுகாப்பேன். ஆனால் நீ என்னை விட்டு ஏன் பிரிந்தாய் அம்மா!

நான் களைத்து வீடு திரும்பும் போது தம்பி சாப்பிடு, தண்ணீர் குடி என பரிவுடன் கேட்பாயே இப்போது யார் கேட்பார்கள் உடல் நலம் இல்லை என்றாலும் பிள்ளைகள் மூலம் எனக்கு தேவையானவற்றை பெற்றுத் தருவாயே அம்மா? நான் எப்போது திரும்பவும் உன் திருமுகத்தைக் காண்பேன்.

அம்மா உம்மை அலங்கரித்து அழகு பார்ப்பேனே அழகான சட்டடை அணிந்து, அமர வைப்பேன், இனிமேல் என் கரங்களுக்கு வேலை இல்லையே என் செய்வேன் யாரிடம் முறையிடுவேன் எனது கனவில் வந்து பதில் சொல்லம்மா? பத்து திங்கள் தவம் இருந்து பாங்குடன் பெற்றபோது பெண் என்று நினைத்தாய் ஆனால் ஆண் பிள்ளையான நான் பெண் பிள்ளை போல் பராமரிக்கின்றேன் என்று ஊரார் சொல்வார்கள். எனக்குள்ளே ஒரு மகிழ்ச்சி தாயின் ஆசையை நிறைவு செய்து விட்டேன் எனக்கு இது போதும் ஆனாலும் அவசரப்பட்டு என்னை விட்டு போய் விட்டீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தடைவ நோயுற்று பாயில் விழுந்த வேளை எல்லாம் காலனுடன் சண்டையிட்டு மீட்டு எடுத்தேன். ஆனால் இன்று தோற்று விட்டேன் கைகட்டி கண்கலங்குகின்றேன்.

உணவும் மருந்தும் உட்செல்ல மறுத்த போது பதறினேன் ஓடினேன் மருத்துவர்களிடம் எனது தாயிற்கு 'சேலைன்' செலுத்துங்கள் என்று மன்றாடினேன் கைவிரித்து விட்டார்கள் உமது வயதைக் காட்டி.

உமது உடல் இதைத் தாங்காது என்றார்கள். கரண்டி மூலம் காப்பாற்றலாம் என்ற ஆசையைக் காட்டினார்கள். மருத்துவர்கள் நானும் விடவில்லை ஒவ்வொரு மணித்துளியும் கரண்டியும் கையுமாக இருந்தேன் அருகில் ஆனால் நீர் சோர்ந்து போய்விட்டீர்களே. ஆழ்ந்த நித்திரையின் வசப்பட்ட காரணத்தினால் உடல் என்னுடன் ஒத்துழைக்கவில்லை சில நாட்களில் கரண்டியும் கைதவறியது. எனது மனமும் பதறியது எதிர்பார்க்காதது நிகழ்ந்தது இன்னும் என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அம்மா மீண்டும் என்னிடம் வருவீர்களா? வழிபார்த்து காத்து இருப்பேன்.

சண்முகம் அருள்நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள்மார் புலம்பல்

அன்பான குலதெய்வமே! நீர் எம்மை விட்டுப்பிரிந்தாலும் உமது நினைவுகள் என்றுமே எம் மனங்களில் நிறைந்து நிற்கும்.

எங்களுக்கு மாமி என்ற பெயரில் கடவுள் தந்தாலும் எமக்கு தாயாகவே இருந்து எமது தாய்மை மிளர உதவி புரிந்தீர்கள். உமக்கு பெண் பிள்ளைகள் மேல் இருந்த வாஞ்சையை எங்கள் மீது பொழிந்தீர்கள்! நீங்கள் கொடுத்து அன்பு மழையில் எமது வாழ்வு இன்பம் நிறைந்த வயலாகவே இதுவரை இருந்தது. ஆனால் 'உமது பிரிவு' என்னும் வறட்சி எம்மை சுட்டு எரிக்கிறது. தாயே! (மாமியே!) உம்மை அப்பம்மா என்று அழைத்தாலும் அன்புத் தாயை விட அன்பு காட்டும் உங்கள் அன்பு நிறைந்த வதனத்தை என்று காண்போம்.

நீங்கள் எமது வாழ்வில் திரும்பவும் கிடைக்க வேண்டிய பொக்கிஷம். இதனைக் கைதவற விட்டுவிட்டோம். இதனை திரும்பவும் கையில் பெறுவதற்கு கடவுளே! அருள்புரிவாயா! எமது காவல் தெய்வமாக, காக்கும் கடவுளாக இருந்த குலவிளக்கை எங்கு காண்போம்! உமது பிள்ளை என்ற வார்த்தையை எப்போது கேட்போம்! யாராவது பிள்ளை என்றால் உமது நினைவுகள் எம்மை வாட்டுகிறது.

உடல் நலம் இன்றிய காலங்களில், எனக்கு பெண் பிள்ளைகள் இல்லை என்ற குறையை நீங்கள் நிறைவு செய்கிறீர்கள். நான் கொடுத்து வைத்தவள் என்று அடிக்கடி கூறுவீர்கள்.

ஆனால் நாங்கள் கொடுத்து வைக்கவில்லையே! எமது பெண்பிள்ளைகளின் சீரும் சிறப்பும் பார்க்க எம்முடன் மாமி இல்லை என்ற குறை எம்மை வருத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பிறப்பு எடுத்தால் எங்கள் சந்ததியில் எங்களுடன் சேர வேண்டும் என்று இறைவனை மன்றாடுகிறோம்.

உம்பிரிவுத் துயரை ஈடு செய்வதற்கு, எவ்வகையுான ஆறுதல் வார்த்தைகளும், வாக்குறுதிகளும் உதவாது. ஆனால் எமது இராக்கால கனவுகளில் அனைத்தும் நிறைவு பெறுகிறது. எமது கனவுகளில் வந்தேனும் எமது துயர் துடைக்க வேண்டும்.



பிரிந்தும் பிரியாமல் தவிக்கும்
மருமக்கள்
பத்மாவதி குகதாசன்
சசிகலா அருள்நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் புலம்பல்

சிந்தையை செதுக்கி,
சீர்பெற வடிக்க முடியவில்லை
இருந்து புலம்பலாய் வருகிறது – எம்மனதில்
வார்த்தைகள் அர்த்தமாற்றதாய்
ஓர் அர்த்தம் வாழ்விற்காய்
அர்த்தம் உருவாக்கித் தந்த தாய்
உன் இழப்பு கானல் நீரோ!
உன் கடைசி மூச்சிற்காய்
காத்திருந்து வந்தானோ! காலனும்
பவ்வியமாய் செய்து தந்த பணியாரமும்
பார்த்து பார்த்து அணிவித்த பட்டாடையும்
பாங்குடனே பாரினில் வாழ்ந்த வாழ்வையும்
பார்க்கலாமோ இனியும் இப்புவியதனில்
சாலை விட்டு வீடு வந்தவுடன் பாலை ஊற்றி
பாசம் தந்த எம் பாட்டியே
காலன் உம்மை எடுத்துச் சென்றாலும்
வலிமை இல்லை அவனுக்கு உம் நினைவுகளை
காவிச் செல்ல
உம் நினைவுகளை நிதம் நினைத்து – உணவும்
உட்செல்ல மறுக்கிறது
உள்ளம் உடைந்து
உடைப்பு எடுத்த கண்ணீரோடு காத்திருக்கும்

பேரப்பிள்ளைகள்
திருமாளவன், அவ்வை, எழிலினி, திருமாறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் அஞ்சலி

மச்சாள் என்று நாமும் அழைத்திருந்தோம்
மனக்குறைகள் உங்களிடம் மனம்
விட்டு உரைத்திடுவோம்
கோபமாய் ஏதுமின்றி
குறைகளும் ஏதுமின்றி
குணமாக எல்லோரோடும்
உறவாடும் உங்கள் உள்ளம்
இனி யாரிடம் காண்போமே
அன்பான மச்சாளாய்
அரவணைத்த நீங்கள் இன்று
எம்மோடு விதி யென்று
நாம் அமைதிபெறுவோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
அதனை தாழ் பணிகின்றோம்



மைத்துணிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவிற்கோர் அஞ்சலி வெண்பா

ஐயிரண்டு திங்களா அங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந் தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
அரியத் தழன் மூடடுவேன்

வட்டிலிலுந் தொட்டிலுமார் மேலுந் தோள் மேலுங்
கட்டிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சிருட்டுத் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாம பேந்தி முலை
தந்து வளர்க்கெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்

அரிசியோ நானிடுவே னாத்தாடனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருகியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவிய பூ
மானே யென வழைத்த வாய்க்கு

அள்ளி யிடுவதரிசியோ தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்.
மகனே யென அழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் அஞ்சலி

பெரியக்கா என்று உனை
பிரியமாய் நாம் அழைத்தோம்
கோபமே அறியா குணவதியாய் நீ
பாசமாய் எமை அழைத்த
பவித்திரமே நீ போகும் வழி
மட்டும் கூறாமற் சென்றதேனோ
நெஞ்சம் வெடிக்குதக்கா உன்னை
நினைக்கயிலே. உன்னோடு
இருந்தகாலம் ஒவ்வொன்றாய்
மலருதக்கா தேனான நினைப்பை
மட்டும் விட்டுச் சென்ற
எங்கள் அக்காவின் ஆத்மா சாந்தி பெற
பிராத்திக்கின்றோம்.

சகோதரர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை சொல்லும் வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | - அதனை சந்தியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பரிசு | - அதனை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | - அதனை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | - அதனை தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கடமை | - அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | - அதனை விளையாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு வினோதம் | - அதனைக் கண்டறியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பாடல் | - அதனைப் பாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | - அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு உறுதிமொழி | - அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு காதல் | - அதனை அனுபவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு அழகு | - அதனை ஆராதியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உணர்வு | - அதனை உணர்ந்து கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | - அதனை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு குழப்பம் | - அதனை விடை காணுங்கள் |
| வாழ்க்கை ஓர் இலக்கு | - அதனை எட்டிப் பிடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | - அதனை முடித்து விடுங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷ்டியப்த பூர்த்தி

மனித வாழ்வில் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய நிகழ்வு அல்லது இது. எமது தமிழ் வருஷங்கள் அறுபதாகும். தான் பிறந்த வருஷத்தை மீண்டும் காணும் வாய்ப்பு அறுபதாவது வயதில் தான் ஏற்படும். அது மட்டுமன்றி இந்த சஷ்டியப்த பூர்த்தியில் மனைவி, மக்கள் பேரப்பிள்ளைகள் என அனைவரும் சூழ பிள்ளைகளாலே செய்யப்படும் கிரியையே ஷஷ்டியப்த பூர்த்தியாகும். மிருத்திஞ்ச தேவரே கிரியையில் முதன்மை பெறுகின்றது. ஆயுள் நீடித்து நிலைக்க மிருத்திஞ்ச ஹோமமும் மற்றும் அறுபது வருஷங்கள் 27 நட்சத்திரங்கள் ஷப் ரிஷிகள் (7) அறுபதாவது வயதிலே 'அபஞித' என்னும் 28வது நட்சத்திர தேஜஸ் ஏற்படும். ஆக 'அபஞித' பிரம்மா, ருத்திரனையும். மேற்கு, கிழக்கில் விஷ்ணு மார்க்கண்டேயர் மற்றும் இந்திரன் முதலானோர் நவக்கிரகங்கள் ஷப்பசிரஞ்சீவிகள் (7) போன்ற தேவதைகட்கு பூஜை ஹோமம் செய்து ஷஷ்டியப்ப விழா பெருமகனுக்கு கும்பஜலம் அபிஷேகித்து ஆயுள் நீடிக்க பிராத்திப்பததாகும் ஜனன ாதகங்களில் ஒரு புருஷாயுகபஹாத்ர என்பதாகும். அதாவது 120 வருடமாகும். அதில் பாதியே 60வயது இதைப் பூரணப்படுத்துவமாய் சகல செல்வ போகங்களுடனும் உறவினர்களுடனும் நிறைந்த மனிதராய்க் காண்பதே சிறப்பாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 10 | - | சர்வதேச சிரிப்பு தினம் |
| ஜனவரி | 26 | - | சர்வதேச சுங்கத்துறை தினம் |
| ஜனவரி | 31 | - | சர்வதேச தொழுநோயாளர் தினம் |
| பெப்ரவரி | 11 | - | நோயாளர் தினம் |
| பெப்ரவரி | 14 | - | சர்வதேச காதலர் தினம் |
| பெப்ரவரி | 25 | - | காசநோய் தடுப்பு தினம் |
| மார்ச் | 8 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 15 | - | சர்வதேச ஊனமுற்றோர் தினம்<br>சர்வதேச இனபேத ஒழிப்பு நாள் |
| மார்ச் | 21 | - | சர்வதேச வன தினம், இனபேத ஒழிப்பு நாள் |
| மார்ச் | 22 | - | சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் | 23 | - | சர்வதேச வளிமண்டலவியல் தினம் |
| மார்ச் | 27 | - | சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் | 07 | - | சர்வதேச ஆரோக்கிய தினம், சுகாதார தினம் |
| ஏப்ரல் | 10 | - | சர்வதேச அன்னையர் தினம் |
| ஏப்ரல் | 12 | - | சர்வதேச தாதிகள் தினம் |
| ஏப்ரல் | 15 | - | சர்வதேச நூலக தினம் |
| ஏப்ரல் | 18 | - | சர்வதேச மரபுரிமை தினம் |
| ஏப்ரல் | 22 | - | சர்வதேச பூமி பாதுகாப்பு தினம் |
| ஏப்ரல் | 23 | - | சர்வதேச புத்தக தினம் |
| ஏப்ரல் | 26 | - | சர்வதேச பாதிக்கப்பட்ட சிறுவர் தினம் |
| மே | 1 | - | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே | 3 | - | சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம் |
| மே | 8 | - | சர்வதேச செஞ்சிலுவைத் தினம் |
| மே | 13 | - | சர்வதேச அந்நியர் தினம் |
| மே | 15 | - | சர்வதேச குடும்ப நலன் தினம் |
| மே | 17 | - | சர்வதேச தொலைத்தொடர்பு தினம் |
| மே | 21 | - | கலாசார பண்பாட்டுத் தினம் |
| மே | 24 | - | சர்வதேச பொதுநலவாய தினம் |
| மே | 31 | - | சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் |
| யூன் | 01 | - | சர்வதேச குழந்தைகள் தினம் |
| யூன் | 04 | - | சர்வதேச அடக்கு முறைக்கெதிரான தினம் |
| யூன் | 05 | - | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூன் | 07 | - | சர்வதேச கூட்டுறவாளர் தினம் |
| யூன் | 01 | - | சர்வதேச தந்தையர் தினம் |
| யூன் | 26 | - | சர்வதேச போதைப் பொருள் தடுப்புத் தினம் |
| யூன் | 27 | - | சர்வதேச சயரோக தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யூலை | 06 | - சர்வதேச விலங்குகளில் இருந்து<br>- மனிதனுக்குப் பரவக்கூடிய நோய்கள் தினம் |
| யூலை | 11 | - சர்வதேச சனத்தொகை தினம் |
| ஆகஸ்ட் | 03 | - உலக நட்புத் தினம் |
| ஆகஸ்ட் | 06 | - ஹீரோசிமா அணுகுண்டுத் தினம் |
| ஆகஸ்ட் | 09 | - நாகசாகி அணுகுண்டுத் தினம் |
| செப்டெம்பர் | 02 | - சர்வதேச தெங்கு தினம் |
| செப்டெம்பர் | 03 | - சர்வதேச சமாதான தினம் |
| செப்டெம்பர் | 08 | - சர்வதேச எழுத்தறிவு தினம் |
| செப்டெம்பர் | 13 | - சர்வதேச தாத்தா பாட்டி தினம் |
| செப்டெம்பர் | 16 | - சர்வதேச ஓசோன் தினம் |
| செப்டெம்பர் | 26 | - சர்வதேச செவிப்புலன் வலுவற்றோர் தினம் |
| செப்டெம்பர் | 27 | - சர்வதேச சுற்றுலா தினம் |
| ஒக்டோபர் | 01 | - சர்வதேச முதியோர் தினம் |
| ஒக்டோபர் | 03 | - சர்வதேச மது ஒழிப்பு தினம், சர்வதேச உயிரினங்கள் தினம், குடியிருப்புத் தினம் |
| ஒக்டோபர் | 04 | - சர்வதேச விலங்கு தினம் |
| ஒக்டோபர் | 05 | - சர்வதேச உறைவிடத் தினம் |
| ஒக்டோபர் | 06 | - சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்டோபர் | 10 | - சர்வதேச அஞ்சலக நாள் |
| ஒக்டோபர் | 13 | - உலக இயற்கை அழிவு குறைப்பு நாள் |
| ஒக்டோபர் | 14 | - உலக தரநிர்ணய நாள் |
| ஒக்டோபர் | 15 | - சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்டோபர் | 16 | - சர்வதேச உணவு தினம் |
| ஒக்டோபர் | 17 | - சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம் |
| ஒக்டோபர் | 04 | - ஐ.நா தினம், உலக சிக்கன நாள் |
| ஒக்டோபர் | 30 | - வளர்ச்சி தகவல் தினம் |
| நவம்பர் | 09 | - சட்ட சேவைகள் தினம் |
| நவம்பர் | 16 | - சர்வதேச பொறுமை தினம் |
| நவம்பர் | 17 | - மாணவர் தினம் |
| நவம்பர் | 21 | - சர்வதேச கடல் தொழிலாளர் தினம் |
| நவம்பர் | 26 | - சர்வதேச சட்ட தினம் |
| நவம்பர் | 29 | - சர்வதேச பாலஸ்தினியர் ஒற்றுமை தினம் |
| டிசம்பர் | 01 | - சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் | 10 | - சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசம்பர் | 13 | - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம் |
| டிசம்பர் | 23 | - சர்வதேச விவசாய தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| சூரியன் மறையும் நாடு | :- இங்கிலாந்து |
| காகித வீடு, சூரியன் உதிக்கும் நாடு | :- ஜப்பான் |
| நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு | :- நோர்வே |
| தெற்கேயுள்ள பிரித்தானியா | :- நியூசிலாந்து |
| அதிகாலை அமைதி நாடு | :- கொரியா |
| கண்ணீர் வாசல் | :- மாவெல் மண்டெல் |
| இந்தியாவின் வாசல் | :- மும்பாய் துறைமுகம் |
| சீனாவின் வாசல் | :- கொயங்கோ நதி |
| நைல் நதியின் கொடை | :- எகிப்து |
| ஆயிரம் வாவிகள் நாடு | :- பின்லாந்து |
| உலகின் கூரை | :- பமீர், திபெத் |
| உலக சர்க்கரைக் கிண்ணம் | :- கியூபா |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | :- சுவிஸ்லாந்து |
| ஐரோப்பாவின் காப்பகம் | :- பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் நோயாளி | :- துருக்கி |
| ஐரோப்பாவின் கோழிக்கூடு | :- நெதர்லாந்து |
| புனித நாடு | :- பலஸ்தீனம் |
| தங்கப்போர்வை நாடு | :- அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா |
| மரகதத்தீவு | :- அயர்லாந்து பொற்கோபுர நாடு, |
| ஆசிய நோயாளி | : மியன்மார் |
| குகை வீடு, இருண்ட கண்டம் | :- ஆபிரிக்கா |
| மத்திய தரைக்கடலின் திறவு கோல் | :- ஜிப்ரோல்டர் நீரிணை |
| லில்லரிப்பூக்களின் நாடு | :- கனடா |
| கங்காருகளின் நாடு | :- அவுஸ்திரேலியா |
| பவளத்தீவு | :- பவர்ரேன் |
| தனிமைத் தீவு | :- லிஸ்டண் டி நயூவா |
| கிராம்புத் தீவு | :- சான்சிபார் |
| ரொட்டி நாடு | :- ஸ்கொட்லாந்து |
| வங்காளத்தின் துயரம் | :- தாமோதர் நதி |
| நதியில்லாத நாடு | :- டென்மார்க் |
| உலகின் இளைய நாடு | :- கிழக்குத் தீமோர் |
| கம்பளியின் நாடு | :- அவுஸ்திரேலியா |
| உலகின் சிறிய நாடு | :- வத்திக்கான் |
| பொன்வாயில் நகரம் | :- அமெரிக்கா |
| பொற்கோயில் நகரம் | :- இந்தியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அழியா நகரம், ஏழு குன்று நகரம் | :- ரோமாபுரி |
| கனவுக்கோபுர நகரம் | :- இங்கிலாந்து |
| கருங்கல் நகரம் | :- அபர்டீண் |
| மரவீடு | :- பிலிப்பைன்ஸ் |
| புல்வீடு | :- வாய் |
| மூங்கில் வீடு | :- கலிபோர்ணியா |
| செங்கட்டி வீடு | :- சீனா |
| சுரங்க வீடு | :- சைபீரியா |
| பனிக்கட்டி வீடு | :- கிறீன்லாந்து |
| குடிசை வீடு | :- வட அமெரிக்கா |
| மரக்குற்றி வீடு | :- நியூகினியா |
| புயலடிக்கும் நகரம் | :- சிக்காக்கோ |
| இந்து சமுத்திரத்தின் முத்து | :- இலங்கை |
| இடி மின்னல் நாடு | :- பூட்டான் |
| குரங்குகளின் நாடு | :- பிரேசில் |
| கிரிக்கட்டின் தாய் நாடு | :- பிரித்தானியா |
| தங்கப்போர்வை நாடு | :- அவுஸ்திரேலியா |
| இங்கிலாந்தின் தோட்டம் | :- கென்ட் |
| வெள்ளை யானை நாடு | :- தாய்லாந்து |
| வெள்ளை நகரம் | :- ஸ்டாக்ஹோம் |
| முத்துத் தீவு :- பஸ்ரெயின் | |
| கோயில் நகரம் | :- மதுரை |
| நீல மலை | :- இந்தியா |
| அரபிக் கடலின் அரசி | :- கொச்சின் |
| இளஞ்சிவப்பு நகரம் | :- ஜெய்ப்பூர் |

## உலகின் முதன்மைகள்

| | |
|---|---|
| உயர்ந்த மலை உச்சி | : எவரெஸ்ட் |
| நீளமான நதி | : நைல் நதி |
| உயரமான நீர்வீழ்ச்சி | : ஏஞ்சல் பால்ஸ் |
| மிகப்பெரிய தீவு | : கிறீன்லாந்து |
| மிகப்பெரிய ஏரி | : கஸ்பியன் கடல் |
| மிகப்பெரிய பாலைவனம் | : சகாரா |
| மிகப்பெரிய சமுத்திரம் | : பசுபிக் சமுத்திரம் |
| மிகப்பெரிய கண்டம் | : ஆசியா |
| மிகப்பெரிய ஆழி | :- மரியானா |
| மிகப் பெரிய தீவுக் கூட்டம் | :- இந்தோனேசியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகப் பெரிய அரசியலமைப்பு :- இந்திய அரசியலமைப்பு
முதலில் உலகைச் சுற்றியவர் :- மகலன்
உலகின் முதன்மையான பணக்காரன் :- பில்கேட்ஸ்

## நவீன மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

இரத்தச் சுற்றோட்டம் :- வில்லியம் ஹார்வே
புற்று நோய :- ரொபேர்ட் வெயினபரி
மயக்க மருந்து :- ஜேம்ஸ் சிம்சன்
கொலரா, காசநோய்க் கிருமிகள் :- ரொபேர்ட்கோச
கருத்தடை மாத்திரை :- பின்கஸ்

இருதய மின் அலைப்படம் :- என்தோவன்
இனப்பெருக்க சிகிச்சை :- மார்ட்டீன் கிலியூ
நீரிழிவு நோய் :- பேண்டிக் கெசட்
சிறுநீரக நோய் :- கோல்ப்
குஷ்ட ரோக கிருமிகள் :- ஹான்சன்
போலியோ முக்கூட்டு வக்சீன் :- அல்பேட்ஸ் சேபீன்
திறந்த இருதய அறுவைச் சிகிச்சை :-வோல்ரன் வில்லிஹெல்
உடற் கூற்றியல் :- அல்பரசர் வானாலர்
மனோதத்துவ ஆராய்ச்சி :- சிக்மன் பிராய்ட்
புகைப்பட சிகிச்சை :- என். ஆர் பின்சன்
வெறிநாய்க்கடி சிகிச்சை :- லூயி பாஸ்டர்
பாலுணர்வுச் சுரப்பிகள் :- யூஜென்ஸ் டினாச்
இரத்தம் உறைதல் :- பால் எர்ல்ச்
ஸ்ரேதஸ்கோப் :- ரேனே லானக்
அம்மை குத்தும் முறை :- எட்வேட் ஜென்னர்

## சொற்களஞ்சியம்

இருபொருள் : கல்வி, செல்வம்
இருவினை : நல்வினை தீவினை
இரு நிதி : சங்கநிதி பதுமநிதி
ஈரறம் : இல்லறம் துறவறம்
இருதிணை : உயர்திணை அஃறிணை
இருகுரவர் : அன்னை தந்தை
மும்மலங்கள் : ஆணவம் கன்மம் மாயை
முப்பழம் : மா பலா வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மிகப்பெரிய வளைகுடா | :- மெக்சிக்கோ |
| உயரமான எரிமலை | :- கொடபாக்சி |
| நீளமான மலைத் தொடர் | :- அன்டீஸ் |
| உயரமான மலைத் தொடர் | :- இமயமலை |
| மிகப்பெரிய திரையரங்கம் | :- ராக்சி |
| மிகப்பெரிய தேவாலயம் தேவாலயம் | :- சென் பீற்றர்ஸ் |
| மிக நீண்ட சுவர் | :- சீனப்பெருஞ் சுவர் |
| மிகப்பெரிய துறைமுகம் | :- நியூயோர்க் |
| மிக உயர்ந்த கட்டிடம் | :- சீயஸ் டவர் |
| மிகப்பெரிய கடிகாரம் | :- பிக்பென் |
| மிகப்பெரிய வைரம் | :- குல்லினன் |
| உலகின் அதிவேக விலங்கு | :- சிறுத்தைப்புலி |
| மிகப்பெரிய விலங்கு | :- ஆபிரிக்க யானை |
| மிக உயரமான விலங்கு | :- ஒட்டகச் சிவிங்கி |
| அதிவேகப் பறவை | :- ம்மிங் பறவை |
| தூங்காத பறவை | :- புறா |
| மிக உயரமான பறவை | :- தீக்கோழி |
| பறக்கத் தெரியாத பறவை | :- பென்குயின் |
| படுத்துறங்கத் தெரியாத மிருகம் | :- குதிரை |
| நிறவேறுபாடு தெரியாத மிருகம் | :- நாய் |
| கீழ்த்தாடையை அசைக்காத விலங்கு | :- முதலை |
| உலகின் மிகப்பெரிய உப்புக் கடல் | :- கஸ்பியன் கடல் |
| நைல்நதி கலக்கும் இடம் | :- மத்தியதரைக்கடல் |
| மிகப்பெரிய நூலகம் | :- அமெரிக்க காங்கிரஸ் நூலகம் |
| மிக நீளமான சுரங்கப் பாதை | :- சுவிஸ்லாந்து |
| மிகப்பெரிய சதுப்பு நிலக் காடு | :- சுந்தர வனம் |
| உயர்ந்த மரம் | :- கலிபோர்னியா காத்தாடி மரம் |
| அதிவேக விமானம் | :- கொன்கோர்ட் |
| முதல் செயற்கைக் கோள் | :- ஸ்புட்னிக் |
| முதல் விண்வெளி வீரர் | :- யூர்க்காகரின் |
| முதல் விண்வெளி வீராங்கனை தெரஸ்கோவா | :- வெலண்டினா |
| முதல் பெண்பிரதமர் | :- ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா |
| சந்திரனில் இறங்கிய முதல் மனிதன் | :- நீல் ஆம்ஸ்ரோங் |
| மிகத் தொன்மையான நாடாளுமன்றம் | :- பிரித்தானியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முக்காலம் | : இறந்தகாலம் நிகழ்காலம் திர்காலம் |
| மும்மூர்த்திகள் | : பிரம்மா விஸ்ணு உருத்திரன் |
| முத்தமிழ் | : இயல் இசை நாடகம் |
| மூவேந்தர் | : சேரர் சோழர் பாண்டியர் |
| மும்முரசு | : வீரமுரசு கொடைமுரசு மங்களமுரசு |
| முக்கொடி | : பனைக்கொடி புலிக்கொடி மீன்கொடி |
| திரிகடுகு | : சுக்கு மிளகு திப்பிலி |
| மூவுலகம் | : விண்ணுலகு மண்ணுலகு கீழுலகு |
| முச்சுடர் | : சூரியன் சந்திரன் அக்கினி |
| முத்தேவியர் | : சரஸ்வதி இலக்குமி உமாதேவி |
| நானிலம் | : குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் |
| நான்மறை | : இருக்கு யசுர் சாமம் அதர்வணம் |
| நாற்படை | : தேர்ப்படை யானைப்படை குதிரைப்படை காலாட்படை |
| நாற்குணம் | : அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு |
| நால்யுகம் | : கிரேதயுகம் திரேத யுகம் துவாபரயுகம் கலியுகம் |
| நால்வகை உபாயம் | : சாமம் பேதம் தானம் தண்டம் |
| நால்வகை நிலை | : பிரம்மசாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி |
| நாற்சொல் | : பெயர் வினை இடை உரி |
| நான்கு இசைக்கருவி | : நரம்புக் கருவி தோற்கருவி துளைக்கருவி உலோகக் கருவி |
| ஐம்பால் | : ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் |
| ஐம்பொறி | : மெய் வாய் கண் மூக்கு செவி |
| ஐம்புலன் | : சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் |
| ஐம்பூதம் | : நிலம் நீர் தீ காற்று ஆகாயம் |
| பஞ்சமாபாதகங்கள் | : கொலை களவு பொய் காமம் குருநிந்தை |
| ஐம்பெருங் காப்பியம் | : சிலப்பாதிகாரம் சீவகசிந்தாமணி வளையாபதி குண்டலகேசி மணிமேகலை |
| ஐம்பொன் | : பொன் வெள்ளி பித்தளை இரும்பு ஈயம் |
| பஞ்சாங்கம் | : திதி வாரம் நாள் யோகம் கரணம் |
| ஐங்குரவர் | : அரசன் ஆசிரியன் அன்னை தந்தை தமையன் |
| பஞ்சபாண்டவர் | : தர்மன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் |
| ஆறுசுவை | : கைப்பு இனிப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆறுசிறு பொழுதுகள் | : காலை நண்பகல் ஏற்பாடு மாலை யாமம் வைகறை |
| ஆறுவகைப் பிறப்பு | : மக்கள் விலங்கு பறவை மச்சம் ஊர்வன தாவரம் |
| ஏழு வள்ளல்கள் | : பாரி குரி ஆய் எழுனி மலையான் பேகன் நள்ளி |
| ஏழு ஸ்வரங்கள் | : ஸ ரி க ம ப த னி |
| ஏழு பெண் பருவம் | : அரிவை தெரிவை மங்கை மடந்தை பேதை பெதும்பை பேரிளம்பெண் |
| அட்டத்திக்குப் பாலகர் | : இந்திரன் அக்கினி யமன் இருநிதி வாயு வருணன் குபேரன் ஈசானன் |
| அட்டாங்கம் | : இருகை இருகால் இருதோள் நெற்றி மார்பு |
| எட்டுத் தொகை நூல்கள் | : நற்றிணை ஐங்குறு நூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை குறுந்தொகை அகநாநூறு புறநாநூறு |
| நவதானியம | : உழுந்து எள்ளு கடலை கொள்ளு திணை சாமை துவரை நெல்லு பயறு |
| நவக்கிரகம் | : சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி இராகு கேது |
| நவரத்தினம | : மரகதம் பவளம் நீலம் வச்சிரம் முத்து பதுமராகம் கோமேதகம் புட்பராகம் வைடூரியம் |
| ஒன்பது மெய்ப்பாடுகள் | : இழிவரல் நகை வீரம் வெகுளி சாந்தம் மகிழ்ச்சி அவலம் அச்சம் பெருமிதம் |

பத்துப்பாட்டு நூல்கள் :
திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை மதுரைக்காஞ்சி பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு மலைபடுகடாம் பட்டினப்பாலை

[illegible] குழைத்தென்னை யெடுத்தாண்ட அங்கயற்க
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1932 - 02 - 28 | | 2013 - 04 - 22 |

யாழ்.அளவெட்டி தம்மனையை பிறப்பிடமாகவும் திருக்கோணமலை திரியாயை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.சண்முகம் தனபாக்கியம் அவர்கள்

2013.04.22 திங்கள் அன்று இறையடி சேர்ந்தார்.


அன்னார் சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மாவின் அன்பு மகளும் திரு.குகதாஸன் (கனடா) திரு.அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். அமரர்.கனகரெத்தினம், மயில்வாகனம், கண்ணம்மா, சின்னத்துரை, கைலாயதேவி (மாணிப்பாய்), அமரர்.ஆறுமுகம், அமரர்.சிவபாக்கியம், திருநாவுக்கரசு, பர்வததேவி, அமரர்.இராசலிங்கம், அமரர்.இராசரெத்தினம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். பதுமாவதி (கனடா), சசிகலா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி - திருக்கோணமலை) ஆகியோரின் மாமியும் வளவன் (கனடா) ஔவை (கனடா) எழிலினி, திருமாறன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் லிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலய ஆசிரியர் விடுதியில் இருந்து 2013.04.23(செவ்வாய்) பி.ப 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
திரு.ச.அருள்நேசன்
தொ.பே : 077 7277940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





ஆலமரம் சரிந்தாலும்
விழுதுகள் வேர்விடும்
வேர்கள் கிளைவிடும்
கிளைகள் துளிர்விடும்
துளிர்கள் பூக்கும்
பூக்கள் காயாகும்
காய்கள் பழமாகும்
பழங்கள் விதையாகும்
மீண்டும் ஆலமரம்
ஓங்கி வளரும்
விழுதுகள் பரப்பும்
இது தான் இயற்கை

எம் துயரை தம் துயராய் ஏற்று எமக்கு எல்லா வகைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு, தொலைபேசிமூலம் எம் துயரிற் கலந்து உறவினர் நண்பர்களுக்கும். எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.



குடும்பத்தார்


சாந்தி, சாந்தி, சாந்தி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



**இந்த மாற்றம் உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமாகும்**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org